காஞ்சி

ஆசிரியர்
அண்ணா



கள்ளக்குறிச்சி மாநாட்டு
தலைவரும், திறப்பாளரும்.

28-8-66

விலை 20 காசு

உலக அரங்கில்

நோயாளி எழுகிறார்!

உலக நாளிதழ்கள் அனைத்துமே அவர் இனி நடமாடும் திறனையும் திரும்பப்பெறமாட்டார் என்று அடிக்கடி எழுதின.

உலகக் கவனத்தைப் பெற்று பீகிங்கின் பலம் வாய்ந்த தோழமைச் சக்தி என்று நேற்று வரை நம்பப்பட்ட ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்திலிருந்து அவரது படம் மிகக் குறுகிய கால அறிவிப்புடன் அகற்றப்பட்டது.

மாஸ்கோவின் அரசியல் மேடையில் திரும்பவும் 'கோசிகின்' தான் என்ற செய்தி உறுதியானது; அப்போதும்கூட மக்கள் சீனத்தின் தலைவரான அவரிடமிருந்து தகவல்களாவது ஏதேனும் வரும் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

கடைசியாக மாசேதுங்கைப்பற்றிய செய்தி இரு கிழமைகளுக்கு முன்னால் அதிகாரபூர்வமாக நவசீனச் செய்தி நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னால் அவர் "யாங்ட்சே" நதியில் நீந்தி விளையாடினார் என்ற செய்தி வெளிவந்த போது, அந்த நீரை ஒரு கையெடுத்துக் குடிக்க 'இனிக்கிறது' என்று சொன்னாராமே ஒரு இராணுவ வீரர், அதைப்போல இப்போது அவர் முதன்முதல் பொதுமக்களுக்கு முன்பாக வந்தபோதும் அவரிடம் கரம் குலுக்கியோரின் கரங்களைத் திரும்பவும் குலுக்கி மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியிருக்கின்றனர் பெரும்பாலோர்.

கட்டுப்பாடு — கட்டளை என்ற பாதையிலேயே போய்க்கொண்டிருக்கும் 70-கோடி சீனமக்களுக்குத் தொய்வு—அதிருப்தி — அவநம்பிக்கை ஏற்படும்போதெல்லாம் பீகிங் புதிய புதிய சொற்களை—போக்குகளை அறிமுகப்படுத்தும்.

"முன்னேற்றம்"— "புரட்சி'— "தாவுதல்" போன்ற பெயர்களெல்லாம் மக்கள் சீனத்தின் அரசியல் அகராதியிலுள்ள கலைச் சொற்களாகும்.

72-வயதைக் கடந்துவிட்ட மாவ் உடல் தளர்ந்துவிட்டார் — உரிய இடத்தை இழந்துவிட்டார்—நாட்டில் வறுமை—மக்களிடையே கசப்பான வாழ்க்கை என்ற செய்திகளெல்லாம் சீனாவைப்பற்றி அதிகமாக வெளிவந்துகொண்டிருக்கும் வேளையில், அதற்கொரு முற்றுப் புள்ளிவைக்க எழுந்து உட்கார ஆரம்பித்துள்ளார் மாசேதுங்.

இப்போது அங்கே நடக்க இருப்பது **கலாச்சாரப் புரட்சியாம்**—அமைதியான முறையில் மாவுக்கு வாரிசாக **லின்பியோ** வருகிறாராம். நவசீனச் செய்தி நிறுவனம் 24 மணிநேர சுறுசுறுப்பான இயக்கத்தில் இறங்கியுள்ளது.

மாவ் இதுவரை பேசியுள்ள—எழுதியுள்ள சொற்கள் 35 இலட்சம் பிரதிகளாக நாடு பூராவும் ஒரு ஆண்டு காலத்துக்குள் பரவ இருக்கிறது. இப்போதே ஆயிரக்கணக்கில் கேட்டு எழுதுகிறார்களாம்—அதில் ஒரு கடிதம் கண்ணீரால் நனைந்திருந்ததாம்!

திரை மறைவு—சந்தேகம்-சர்ச்சை ஆகியவற்றுக்குப் படிக்கப்பட்ட சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு கலகலப்பைக் காட்டுகிறது. பத்து இலட்சத்துக்குமேல் கலந்துகொண்ட பல்வேறு வகைப்பட்ட மக்கள் கூட்டத்தில் 21 முக்கிய உயர் மட்டத் தலைவர்களுக்கு மத்தியில் "கலாச்சார புரட்சியை" வெளியிட்ட மாசேதுங் தலைமையில் 'லின் பியோ' வாரிசாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார். பதிலுக்கு அவர் மாவின் தலைமை—கருத்துச் செறிவு - வழி காட்டும் திறமை ஆகியன பற்றி வாயாரப் புகழ்ந்திருக்கிறார்.

மாவ் இருக்கிறாரா—இல்லையா என்பதில் ஆரம்பித்து—இருக்கிறார் இருந்தாலும் பழைய நிலையில் இல்லை என்பது வரை வளர்ந்த வளர்த்து விடப்பட்ட யூகங்களுக்கு ஒரு தேக்க நிலை வைத்துவிட்டு மாசேதுங் **"இருக்கிறேன்; இருக்கவேண்டியவைகளோடு"** என்று உலகுக்குத் தெரிவித்திருக்கிறார்.

1949-ல் மக்கள் சீனத்தை நிறுவிய மாசேதுங் உலகுக்கு எத்தனையோ சோதனைக் கட்டங்களைக் கொடுத்ததுபோலவே உள்நாட்டிலும் பல சோதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார். அப்போதெல்லாம் அவருக்கு உதவியாக இருந்துவந்தது "ஏகாதிபத்திய எதிர்ப்பு" என்ற தத்துவம். சோவியத் யூனியனுடன் "குடும்பப் பிளவு"கள் தோன்றிய பிறகு 'திரிபு வாதம்' என்ற கோட்பாட்டை எதிர்ப்பதும் அவரது அரசியல் வாழ்க்கை எருவானது.

உலக அரசியல் வாதிகள் பீகிங்கில் அடுத்து தெரியப்போவது யார்? ஏன்? என்று ஆவலுடன் கவனித்துக்கொண்டிருந்த தருணத்தில் பழைய கதா பாத்திரமே புதிய மெருகுடன் வந்து நிற்கிறார். சீனாவின் தலைநகரில் கூடிய பதினோருவது மத்திய குழுவின் கூட்டம் மாசேதுங்கின் **எல்லா வகைகளிலும்** மீண்டும் ஒப்புக்கொண்டிருக்கிறது. குறிப்பாகக் கடந்த நான்கைந்து ஆண்டுகளாக அவரது செல்வாக்குப் பற்றி இருந்த சந்தேகத்துக்கெல்லாம் வட்டியும் முதலுமாகச் சேர்த்து ஆதாயத்தைப் பெற்றிருக்கிறார் மாவ்!

மீண்டும் அதே பக்கபலம்' பின்பற்றுதல்; வாழ்த்தொலி' கொள்கை முழக்கம் பெயருக்கு **பின்லியோ** அறிமுகம். மற்றபடி உடல்நோய் தீர்ந்ததோ இல்லையோ அரசியல் நோய் மறைந்த நிலையில் மீண்டும் தோன்றியிருக்கிறார் மாசேதுங்.

சீனச் சுரங்கத்திலிருந்து இந்த தருணத்திலாவது மாவ் அகலுவது. ஸ்டாலினுக்குப் பின்னர் சோவியத் யூனியன் பெற்ற மாற்றத்தைத் தோற்றுவிக்கக்கூடும் என்று பார்வையாளர்கள் ஆவலுடன் காத்து நின்றனர்.

ஓரளவுக்கேனும் வரவேற்கத் தகுந்த அத்தகையமாற்றம் அங்கே நிகழவில்லை. மாசேதுங்கை மீண்டும் தூக்கி நிறுத்தியுள்ள மக்கள் சீனத்தின் பதினோருவது மத்தியக் குழுக் கூட்டத்தின் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதை எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் சீனம் "உலக நாடுகளில் ஒன்று" என்ற அரசியல் அந்தஸ்தைப் பெறவில்லை; இன்னும் அது மாசேதுங்கின் சீமையாகத் தான் இருக்கிறது!

— எஸ். ஆர்.

அக்கறையாளன்!

எவன் ஒருவன் வாக்குக் கொடுக்குமுன் மற்றவரைக் காட்டிலும் அதிகமாக நிதானிக்கிறானோ, அவனே அதை நிறைவேற்றுவதிலும் மற்றவரைக் காட்டிலும் அதிக அக்கறையோடிருப்பான்.

—ரஸ்கின்.

காஞ்சி

மலர் 3 28—8—66 இதழ் 5

தெளிவுபெற வாரீர்!

சர்க்கரை, கற்கண்டு, தேன்!

— படித்தீர்களா? இனிக்கிறதா? இனிக்கவில்லையா என்ன? சர்க்கரை, கற்கண்டு, தேன் எல்லாமே இயல்பில் இனிப்பவை ஆயிற்றே!

பால், பதனீர், பன்னீர் ரசம்!

—பருகினீர்களா? தாகம் தணிந்ததா? ஐயோ பாவம்! என்று அங்கலாய்த்துக் கொள்கிறீர்கள்!

உங்களுக்குப் புரிகிறது. ஏட்டிலே **'இனிப்பு'** என்று எழுதிவிட்டால் மட்டும் இனிக்காது; பானம் என்று எழுதினால் மட்டும் தாகம் தணிந்துவிடாது என்று!

சேலம் உருக்காலை பற்றிக் கடந்த பத்தாண்டுக் காலமாக, தமிழகத்து மக்கள் அத்துணைப் பேரும் குரல் எழுப்பிக் களைத்துப் போய்விட்டார்கள்.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் காந்தியார் ஒரு முறை இலண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டுக்குப் புறப்பட்டுப் போகும்போது, இந்தியப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார்: 'திரும்பும்போது சுதந்திரத்தோடு திரும்புவேன்; இல்லாவிட்டால், அரபிக் கடலில் விழுந்து சாவேன்'—என்று.

கடந்தகிழமை நமது மதிப்பிற்குரிய தமிழக முதலமைச்சர் வடநாட்டு யாத்திரைக்குப் புறப்படு முன்னர் சென்னையில் அறிவித்தார்; நாலாம் திட்டத்தில் நிச்சயம் **சேலம் உருக்காலை** உண்டு; இதற்காக எதிர்க்கட்சிகள் கூப்பாடு போடத் தேவையில்லை!'—என்று. போய்விட்டுத் திரும்பிவந்து கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு, எதிரே இருப்பவர்களை ஏறிட்டுப் பார்க்க இயலாத நிலையில் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு, '4-ம் திட்டம் இன்னமும் இறுதியாக்கப்படவில்லை: டிசம்பரில்தான் இறுதி செய்யப்படும்; எப்படியும் **இயன்றவரையில்** திட்டத்துக்காகப் **போராடி கிடைக்கச் செய்வேன்'**—என்று பேசி இருக்கிறார்.

இலண்டன் சென்ற காந்தியார் அப்போது வெறுங்கையோடு திரும்பியதைப் போலவே, பக்தவத்சலமும் சமாதான வார்த்தைகளைச் சுமந்துகொண்டு வந்து சேர்ந்திருக்கிறார்.

இன்றைக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது! அதாவது அந்நிய—வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சி அகற்றப்பட்டுவிட்டது; இதேபோல் உருக்காலையும் ஓர் நாள் வரும் என்பவர்களும் இருப்பார்கள்!

அது, இப்போது தேவை—தமிழகத்துக்கு உடனடியாகத் தேவை!

தேவை, சமாதானங்களல்ல. வாய்மொழி உத்திரவாதங்கள் அல்ல!

சேலம் உருக்காலைத் திட்டம் தற்போது இல்லை என்று தெரிந்தவுடனேயே முதலமைச்சர் டில்லியில் பேசியிருக்கிறார், **இம்மாதிரியான பிரச்னைகளுக்கு முடிவெடுப்பதை தேர்தலுக்குப் பின் வைத்துக்கொள்ளக் கூடாதா?** என்று.

எதையாவது சொல்லி, எதையாவது செய்து எப்படியும் மக்களை மயக்கி—ஏமாற்றி தேர்தலிலே வாக்குறுதிகளை வாரி வழங்கி, வாக்குகளைப் பெற்று, மீண்டும் அரியணையேறி அமர்ந்துவிட்டால், அப்புறம் அடக்கு முறைகளும் போலீஸ் இராணுவமும் இருக்கவே இருக்கிறது; பார்த்துக்கொள்ளலாம்! திட்டங்கள் பற்றிய அறிவிப்புக்களை தேர்தலுக்குப் பின் வைத்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்தில் அப்படிச் சொல்லி இருக்கிறார்!

ஆனால், இந்த உருக்காலைக்கு காங்கிரசில் இதயம் படைத்த சிலர் உள்ளிட்ட தமிழகத்து அனைத்துக் கட்சிகளுமே ஆண்டாண்டுக் காலமாக வேண்டிக் கொண்டு வந்துள்ளன.

தி. மு. க. வைப் பொறுத்த வரையில், இது வரைக்கும் அது கேட்டுக்கொண்ட அளவிலும் மிஞ்சி, சிவகெங்கையில் நடைபெற்று முடிந்த மாநாட்டில், தேவையானால், பிற கட்சிகளுடனும் இணைந்து சேலம் உருக்காலைக்காகப் போராட்டமே நடத்தவும் உறுதி பூண்டுள்ளது.

இந்நிலையில், சேலம் உருக்காலை ஏட்டுச் சர்க்கரை தான் என்ற அறிவிப்பு, தமிழக மக்களை ஏமாற்றமடையவும், கவலைப்படவும் செய்வதாகும்!

நமக்குள்ள வாய்ப்பு வசதிகள் யாவும், இத்தகைய கொடுமைகளைக் களைவதற்கு நாம் உடனடியாக ஒன்றுபட்டாக வேண்டும் என்பதுதான்!

தேர்தல் வரையில் தள்ளிவைக்கக்கூடாதா?—என்ற முதலமைச்சரின் அங்கலாய்ப்பிலிருந்து நாம் பெற வேண்டிய பாடங்கள் பலப்பல இருக்கின்றன.

இப்பாடங்கள் பற்றிக் கள்ளக்குறிச்சியிலே நடைபெறவிருக்கும் தென்னாற்காடு மாவட்ட மாநாட்டிலே நல்ல பல விளக்கங்களைத் தலைவர்கள் தரவிருக்கிறார்கள்.

உரிமை கோரியதற்காக அடித்துக் கொல்லப்பட்ட ஆசிரியர் உடையார்பாளையம் வேலாயுதம் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்த **திரு. கே. என். இராமச்சந்திரன்** தலைமை தாங்கவிருக்கிறார் அம்மாநாட்டிற்கு. கழக முன்னாள் துணைமேயரும், தற்போதைய மக்களவை உறுப்பினருமான **திரு. பி. சிவசங்கரன்** மாநாட்டைத் திறந்து வைக்கவிருக்கிறார்.

எங்களது அடுத்த திட்டம் என்ன?

என்ற வினாக்குறியோடு நீங்கள், தலைவர்கள் தரும் அரிய விளக்கங்களைக் கேட்க வரும்போதே, அருகில் அமர்ந்திருப்பவர் அடுத்த மாவட்டத்தைச் சார்ந்தோரானால்—அம்மாவட்ட நிலை, வாய்ப்பு, வசதி பற்றியும் அளவளாவி மகிழவும், கள்ளக்குறிச்சி நோக்கி வாரீர்! வாரீர்!! என்று அன்பழைப்பு விடுக்கிறோம். ❋

கேள்வி--பதில்!

1. எலிகளைச் சாப்பிடலாம் என்று காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் யோசனை சொல்லியிருக்கிறாரே கவனித்தீர்களா?

கவனித்தேன். பொதுமக்கள் இதைக் கவனத்தில் வைத்துக் கொண்டு ஒட்டுச்சாவடி செல்ல வேண்டும். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்தபிறகு, காங்கிரசாட்சி மக்களுக்கு உணவுப் பொருளாகத் தருவது எலிகளை! மலையைக் கெல்லி எலி பிடிப்பது என்பது பழமொழி.

அந்தப் பழமொழியை மெய்ப்பிக்கிறது காங்கிரசாட்சி.

2. சிலோனுக்கு நம் நாட்டிலிருந்து ஏராளமாக வெங்காயம் ஏற்றுமதி ஆகிறதாமே, அப்படியா?

ஆமாம்! ஆனால் இப்போது, போட்டி வலுவாகிவிட்டிருக்கிறது. லெபனான், ஈஜிப்ட் ஆகிய இருநாடுகளும், போட்டியிடுகின்றன. நமது நாட்டு வெங்காய ஏற்றுமதி குறைந்துகொண்டு வருகிறது.

3. பர்மாவிலிருந்து, தாயகம் திரும்பியவர்கள் எப்படி இருக்கிறார்கள்?

இன்னும் அகதிகளாகவே இருக்கிறார்கள்!

4. கிருஷ்ணமேனன், அடுத்த பொதுத் தேர்தலில், பம்பாயில் நிற்க முடியாது என்று பம்பாய் மாநிலக் காங்கிரஸ் தெரிவித்து விட்டதாமே, ஏன்?

தேசிய ஒருமைப்பாடு எவ்வளவு தூரம் வெற்றி அடைந்திருக்கிறது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வதற்காக இருக்கலாம்.

5 வியட்நாம் அதிபர் ஹோ—சி—மின் எப்படிப்பட்டவர்?

தியாகத்தீயில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கம்.

6. ஆப்பசைத்த குரங்கு போல!—என்று பழமொழி சொல்லுகிறார்களே, குரங்குகள் மனிதர்களைப் பற்றி இப்படி ஏதாவது பழமொழி பேசிக் கொள்ளுமா?

யார் கண்டார்கள்! ஒரு சமயம், குரங்குகள் அவதிப்படும் போது, வியட்நாமில் நுழைந்த அமெரிக்கப் படைபோல அவதிப்படுகிறோமே என்று பேசிக் கொள்கின்றனவோ, என்னமோ?

7. ஜெயப்பிரகாஷ்நாராயணர் ஷேக்அப்துல்லாவைச் சந்தித்த காரணம் என்ன?

திரை மறைவில் என்னமோ நடக்கிறது என்பது மட்டும்தான் தெரிகிறது. வலை வீசுவதாக இருக்குமோ, வரம் கொடுப்பதாக முடியுமோ, தெரியவில்லை. சந்திப்புக்குப் பிறகு ஜெயப்பிரகாசர் வெளியிட்டுள்ள அறிக்கையைப் படிக்கும்போது, ஷேக் அப்துல்லாவின் போக்கில் எந்த மாறுதலும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

8. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்ட பணம் எவ்வளவு? பலன் எவ்வளவு?

செலவழிக்கப்பட்ட தொகை 14000 கோடி ரூபாய் என்று கணக்குத் தருகிறார்கள். பலன், மக்கள் இன்னும் வயிற்றை இறுகக் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆட்சியாளர்களின் புத்திமதி!

9. தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் 'அராஜகம்' ஏற்படும் என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி யார் பேசுகிறாரே, ஏன்?

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் ஏன் நீடிக்கவேண்டும் என்பதற்கான காரணம் கூற முடியாததால் அப்படிப் பேசுகிறார். காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட பிறகு, நடைபெற்ற கிளர்ச்சிகள்...கலவரங்கள்—துப்பாக்கிச் சூடுகள் ஆகிய விவரத்தைத் துணிவிருந்தால் வெளியிடச் சொல்லேன் பார்ப்போம். வெள்ளைக்காரனுடைய 200 வருட ஆட்சியிலே நடைபெற்றதைவிட அதிகமான அளவு அல்லவா காங்கிரஸ் ஆட்சியிலே துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது. சோப்புச் சீமான் பேசிக்கொண்டிருந்த அதே சமயத்தில், அவருடைய காங்கிரஸ் கட்சி நடத்தும் ஆட்சி, அசாமில், நாலு பேர்களைச் சுட்டுக் கொன்றது! அராஜகம் தாண்டவமாடுகிறது, காங்கிரஸ் ஆட்சியில். அதை மறைக்க, தி. மு. க. ஆட்சிக்கு வந்தால் அராஜகம் நடக்கும் என்று பேசுகிறார்; குளிக்க வேண்டாம், உடம்பு அழுக்காகிவிடும் என்பது போன்ற வேடிக்கைப் பேச்சு இது.

10. டாக்டர் சுகர்ணோவின் நிலைமை இப்போது எப்படி இருக்கிறது?

மற்றவர்கள் முறுக்கு தின்பதைக் கண்டு கோபித்துக் கொள்ளும் பல் இழந்த 'தாத்தா'போல இருக்கிறார்!

11. பம்பாய் முதலமைச்சரும் மைசூர் முதலமைச்சரும், கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் படம் பார்த்தேன், இவ்வளவு நேசமாக இருந்தும், இவர்கள் ஏன் 'எல்லைச் சண்டைபோட்டுக் கொள்கிறார்கள்?

குஸ்தி குத்துச்சண்டை போய்ப் பார்த்ததில்லையா? ஒருவரை ஒருவர் வீழ்த்த சண்டை போடுவதற்கு முன்பு 'மல்யுத்த வீரர்கள்' ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்துக்கொள்கிறார்களே! அதுபோலத்தான் இதுவும்.

12. பீகாரில் பொது வேலை நிறுத்தம் நடந்ததாமே, பள்ளிக்கூடங்களையும் மூடிவிட வேண்டும் என்று கிளர்ச்சிக்காரர்கள் கேட்டுக்கொண்டார்களா?

பீகார் அரசு, கிளர்ச்சிக்காரர்களுக்கு அந்த வேலையைத் தரவில்லை. பள்ளிக்கூடங்களை, பீகார் அரசே மூடிவைத்து விட்டது.

13 விலைவாசி உயர்வைக் கண்டிக்க ஒரு காங்கிரஸ்காரரே, தமது உடலில் கிரசின் எண்ணெய் ஊற்றிக்கொண்டு கொளுத்திக் கொண்டு இறந்துவிட்டாராமே, காங்கிரசார் தலை குனிந்து கொள்ளத்தானே வேண்டும்.

உண்மையான, பழைய பண்பட்ட காங்கிரஸ்காரர்கள் தலை

(12-ம் பக்கம் பார்க்க)

தம்பி

உலகின் பாதியைச் சுற்றிவிட்டு வந்துள்ள காமராஜர் தமது முதல் முழக்கத் திலேயே தம்மைத் தாக்கிப் பேசி இருப்பது கண்டு மெத்த வருத்தப்படுவதாக எழுதி இருக்கிருய், நம் தோழர்களிலே சிலர் கோபம் கொண்டிருப்பதாகவும் அறிகிறேன். ஆனல் உண்மைக் காங்கிரஸ்காரர் சிலர் வருத்தமல்ல—கோபமல்ல — வெட்கப்பட்டிருக் கிருர்கள் என்று தெரிகிறது. இருக்குமல்லவா, பாவம்! அவர்கள் ஓடிஓடிப் பேசி வரு கிருர்கள் எமது தலைவர் உலகுக்கே உன்னதமான தத்துவங்களைத் தந்துவிட்டு வரச்

குன்று குடை பிடித்துக்கொள்ளுமா?

சென்றிருக்கிருர் என்று. வந்தவர் அப்படிப்பட்ட தத்துவ விளக்கம்பற்றியும், தத்துவ விளக்கத்தைத் தாம் தந்தபோது அந்தந்த நாட்டினர் ஆச்சரியத்தால் வாய்பிளந்து நின்றது பற்றியும் எடுத்துரைப்பார், கேட்டு இன்புறலாம், என்ற ஆசையுடன்தானே போயிருந்திருப்பார்கள் முழக்கம் கேட்க. ஆனல் அவ்வளவு தொலைவு போய்விட்டு வந்தவர், என்ன பேசினுர்; வழக்கமான 'விட்டேனு பார்!' என்பதைத்தானே! எனக்குத் தெரியாதா அவனுேட யோக்யதை! இவனுேட நிலை! என்ற திருவாய் மொழிதானே!!

இதைத்தான் எல்லாச் சில்லரைகளும் நித்தநித்தம் பொழிந்து
தள்ளிக்கொண்டிருக்கின்றனவே, இவர் பெரியவர் — உயர்ந்த இடம்
இருப்பவர்—உலகு சுற்றியவர்—இவருமா அதே பேச்சைப் பேசுவது;
அதிலும் வந்த உடனே!

என்றெண்ணி வெட்கப்படுகிருர்கள்.

மாஸ்கோ சென்றேன், ரஷிய நாட்டின் மகோன்னதமான வளர்ச்சியைக் கண் டேன். எப்படி ஒழிக்க முடியும் இங்குள்ள ஏழ்மையை என்று இதுநாள் வரையில் ஏங்கிக்கிடந்தேன்—சோவட்பூத நாட்டினைக் கண்டேன்—உறுதிகொண்டேன் — புது நம் பிக்கை கொண்டேன் — ஏழ்மையைப் போக்க முடியும்! அதற்கான திட்டத்துடன் வந்துள்ளேன்! கேண்மின்! என்ற முறையில் எழுச்சயூட்டத்தக்க முறையில் எவரையும் தம் வசம் ஈர்க்கத்தக்க வகையில் பேசுவார், தாம் மிகப்பெரிய தலைவர் என்பதனை மெய்ப் பித்துக் காட்டுவார் என்றெல்லாம் எண்ணிக்கொண்டு போயிருக்கிருர்கள், அவரோ பாவம் அந்தப் பழைய பாணிப் பேச்சையேதான் பேசிக்காட்டி இருக்கிருர். நாடு பல சென்று வந்தவர் ஏதேது பேசுகிருர் கேட்போம் என்று பற்பல நாட்டுத் தூதரகத்தினர் கூட ஆவலாக இருந்திருப்பார்களே; பெரியவர் அந்தப் பழைய பாட்டையே பாடிவிட் டாரே, விட்டேனு பார்! என்ற பாட்டை; அதனைக் கேட்ட பிறநாட்டுத் தூதரகத்தினர் இவ்வளவுதானு இவர் சரக்கு என்றல்லவா எண்ணிக்கொள்வார்கள் என்பதனை நினைத்து உண்மைக் காங்கிரஸ்காரர்கள் உளளபடி வெட்கப்பட்டுததான் இருப்பார்கள்.

மண்டலம் பல சென்று திரும்பிய மாமன்னன் உரைகேட்டிட சிற்றரசரும் புலவர் பெருமக்களும், வணிகரும் மற்றும் வகையான வாழ்வினரும் கூடி இருந்த அவைதனில் அமர்ந்து மாமன்னன், அவையினரே! நாட்டினிலே உள்ள ஏரி குளம குட்டைகளிலே



காசிக்குச் சென்று கற்றது இதுவோ?

உள்ள மீன்களைக் குவியல் குவியலாகப் பிடித்திடத் தக்க வலை உண்டு நம்மிடம் அறிவீரன்றோ!—என்று பேசிடின், அவையினர் என்ன எண்ணுவர்; தனியே சென்று தலைதலையென்று அடித்துக் கொள்வர்.

காசி சென்று திரும்பியவரைக் கண்டு பேசச் சென்றவரிடம் காசித் தலத்தின் மகிமை பற்றியும் கங்கையின் எழில் பற்றியும், அங்கு சென்றதால் தமக்கு ஏற்பட்ட மனஅமைதி பற்றியும் கூருமல், "கருவாடு மிக மலிவு" என்று பேசிடின் என்ன எண்ணிக்கொள்வர்; கைபிசைந்து கொள்வர், காசிக்குப் போய்க் கற்றுக் கொண்டு வந்தது இதைத்தாஞ என்று.

எதிர்க் கட்சிகளை—குறிப்பாக நமது கழகத்தை வழக்கம்போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத்தான் அவ்வளவு பெரியவரால் முடிந்ததே யன்றி, பொதுவுடைமை நாடுகளிலே உலவியதால் பெற்ற புதுக் கருத்துகள் பற்றிப் பேசினுரோ! நினைப்பே வரவில்லை! அவருடைய நினைவு முழுவதும், கழகத்தின் மீதுதான் இருந்திருக்கிறது.

சிலருக்குக் கோபம், சிலருக்கு வருத்தம், உண்மைக் காங்கிரசாருக்கு வெட்கம் ஏற்பட்டது அந்தப் பேச்சைக் கேட்டு—எனக்கோ தம்பி! ஒரு திருப்தி! ஒரு மகிழ்ச்சி! அவர் உலகத் தலைவர்களின் வரிசையிலே சேர்ந்துவிட்டார் என்றும், உலகத் தலைவராக உயர்ந்துவிட்டார் என்றும் கூறி உடுக்கை அடிக்கிருர்களே, உண்மையிலேயே அவர் உயர்ந்துபோய், எங்கே நம்மைப் பற்றிய நினைப்பற்றுப் போய்விடுகிறதோ—ஒரே அடியாக அலட்சியப்படுத்தி விடுவாரோ — கழகமா! அதை எதிர்ப்பதா!—இதுவா நாம் மேற்கொள்ள வேண்டிய வேலை. வேலையா அது! நாம் எதிர்த்தொழிக்க வேண்டியது இல்லாமை, போதாமை, அறியாமை எனும் தீமைகளை என்று பேச ஆரம்பித்துவிடுகிருரோ—அவர் அவ்விதம் பேசக் கேட்டு பொது மக்கள், கழகத்தைப் பற்றிய நினைப்பே அவருக்கு வரவில்லை! அதை ஒரு பொருட்டாக அவர் மதிக்கவில்லை! என்று பேசிக் கொள்கின்றனரோ என்றெண்ணி அஞ்சிக் கொண்டிருந்தேன்.

பெரியவர் பேச்சு அந்த அச்சத்தைப் போக்கிவிட்டது.

அவ்வளவு தொலைவு போய்விட்டுவந்தும் அவருக்குக் கழகம்தான் பிரச்சினையாக இருக்கிறது.

உயர்ந்தநிலை சென்றுராமே, அங்கிருந்து நோக்கும்போதும் அவருடைய கண்களுக்கு நாம்தான் தெரிகிறோம்.

இதனை எண்ணிடும்போது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. நமது கழகம் சாமான்யமானது அல்ல; எங்கெங்கு சென்று திரும்பிடினும் அவருடைய கவனத்தை ஈர்த்திடும் வல்லமை பெற்றிருக்கிறது.

உலகத் தலைவராகிவிட்டார் என்கிருர்கள் காமராஜரை! மகிழ்ச்சி! அந்த உலகத் தலைவராகி விட்டவர், நமது கழகத்தைத் தான் தாக்கிப் பேசுகிருர், பேசிட ஆயிரம் பிரச்சினைகள் இருந்தும்.

ஆகவே கழகம், உலகத் தலைவர் நிலையைப் பெற்றுள்ளவரின் 'கவனிப்பை'ப் பெற்றிருக்கிறது!

பொருள் என்ன? கழகம் உலகத் தலைவர் ஆகிவிட்ட பிறகும் கவனித்தாக வேண்டிய பிரச்சினையாக இருக்கிறது.

கழகத்தின் வளர்ச்சியும் வல்லமையும் அந்த வகையிலே இருக்கிறது.

அவ்வளவு பெரியவர் ஆகிவிட்டவராலும் அலட்சியப்படுத்த முடியாத அளவு வளர்ந்துவிட்டிருக்கிறது.

ஆகவே தம்பி! நம்மை நாம் அறிந்துகொள்ளச் செய்தது அவருடைய முழக்கம்.

என் மகிழ்ச்சி அதன் காரணமாகத்தான்!

ஆயிரம் பிரச்சினைகள் உள்ளன அவர் பேசிட—

நாணய மதிப்புக் குறைப்பு — அதன் விளைவு.

எல்லைத் தகராறுகள்—அவற்றுக்கான பரிகாரம்.

பாகிஸ்தான் — சீன கூட்டுச் சதி — அதனை முறியடிக்க நாடு மேற்கொள்ள வேண்டிய முறைகள்.

உணவுப் பிரச்சினை — அதற்குப் பரிகாரம்.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்-அதன் வடிவம், பொருள்—பலன்.

இப்படிப் பிரச்சினைகள் பலப்பல உள்ளன. இவை பற்றி இவ்வளவு வளர்ந்துள்ளவர் என்ன கூறுகிருர் என்று அறிந்துகொள்ள மக்கள் ஆவல் கொண்டு தானே இருப்பார்கள். இந்தப் பிரச்சினைகள் பற்றி மூண்டுவிட்டுள்ள குழப்பத்தைப் போக்குவார், தெளிவளிப்பார் என்று எண்ணுமலிருக்க முடியுமா; அகில இந்தியக் காங்கிரசின் தலைவராயிற்றே! ஆனல் பாரேன் தம்பி பொருளாதாரப் பிரச்சினை பற்றி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பேசட்டும்—உணவுப் பிரச்சினை பற்றி சுப்ரமணியம் பேசட்டும்—உலகப் பிரச்சினை பற்றி இந்திரா காந்தி பேசட்டும்—நான் அந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசப் போவதில்லை, என் முன் உள்ள பிரச்சினை ஒன்றே ஒன்று! இந்தத் தேர்தலில் கழகம் காங்கிரசை வீழ்த்தாமல் இருக்கும் வழியைக் கண்டு பிடிப்பது—அந்தப் பிரச்சினை பற்றித் தான் நான் பேசுவேன் என்று கூறுபவர்போல, வந்ததும் நம்மைப் பற்றிய தெந்தினமே பாடி இருக்கிருர்.

தம்பி! களம் செல்லும் வீரன் வாளின் கூர்மை சரியாக உளதா என்று பார்த்துக் கொள்வான்.

வீரஅர்ஜுனன் வேடமணிந்து நாடகமேடை செல்வோன், வாளின் கூர்மை சரியாக உளதா என்று பார்த்

புகையிலையில் கிடைக்குமா? பூமணம் தம்பி!

சிடுவான், மீசை சரியாக ஒட்டப்பட்டிருக்கிறதா என்றுதானே பார்த்துக்கொள்வான்.

காமராஜர் உலகப் பிரச்சினைகளைப் பற்றி ஆய்ந்தறிந்திடவே நாடு பல சென்றுள்ளார் என்று அவர் நாமாவளி பாடிடுவோர் கூறிடினும், அவர் கொண்டுள்ள அக்கறை உலகப் பிரச்சினைகள்மீது அல்ல; காங்கிரஸ் நடாத்தும் எதேச்சாதிகாரத்தை உருக்குலைக்க எழுந்துள்ள கழகத்தை எப்படி மடக்குவது என்பதிலேதான்.

அவர் ஏதோ நாலு வார்த்தை பேசிவிட்டார் என்று வருத்தப்பட்டுக் கொள்கிறார்களே, நமது தோழர்கள், அவர்கள் ஒரு விஷயத்தை உணருகிறார்களா?

காமராஜர் கொண்டுள்ள வருத்தத்தை உணருகிறார்களா?

வருத்தம் கொஞ்சமாகவா இருக்கும் அவருக்கு.

சிற்றரசர்கள்
சீமான்கள்
வணிகக் கோமான்கள்
நிலப் பிரபுக்கள்
ஆலை அரசர்கள்
பெரிய புள்ளிகள்

அணிவகுத்து நிற்கிறார்கள், வெட்டி வா என்றால் கட்டி வருகிறோம் என்று கூறியபடி.

தேர்தல் நிதியினை இலட்ச இலட்சமாகத் திரட்டிக் கொடுத்திட கனதனவான்கள் போட்டி போட்டுக் கொண்டு முனைகின்றனர்.

இதழ்கள், புகழ் பாடிடத் தயாராக உள்ளன!

சேர்த்துக் கொள்ளுங்கள் சேவை செய்கிறோம் என்று செப்பிட பலர் துடித்துக் கிளம்பி வருகின்றனர்.

இருந்தும்! மனதிலே மகிழ்ச்சி துள்ளத்தக்க சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திடப் பலர் இருந்தும்?

அடுத்த தேர்தலைப்பற்றிய பயமற்று, கவலையற்று இருக்க முடிகிறதா அவரால்!

இருக்க விடுகிறதா கழகம்!

இதனை எண்ணிடும்போது அவருக்கு வருத்தமாகத்தானே இருக்கும். துளியாவது வெளியே காட்டிக் கொள்கிறாரா? இல்லையே! வருத்தத்தைக் குறைத்துக் கொள்ளத்தான் அவர் நம்மைப்பற்றி நாலு வார்த்தைகள் பேசுகிறார்.

மிக மட்டமாகப் பேசுகிறார்.

கேவலமான விதத்தில் பேசுகிறார்.

அவன்-இவன்-என்றுகூடப் பேசுகிறார்,

என்று வருத்தப்பட்டுக்கொள்கிறாயே தம்பி! அவர் வேண்டுமென்றேவா அப்படிப் பேசுகிறார்.

அவருடைய பேச்சே அப்படித்தான்!

அவருக்குத் தெரிந்த பாணியில் அவர் பேசுகிறார்!

இத்தனை வயதான பிறகு அவரைப் புதுப்பாணியில் பேசப் பழகிக்கொள்ளச் சொல்லமுடியுமா!

ஏசுகிறாரே! ஏசுகிறாரே! என்று நீ வருத்தப்படுகிறாய்; தம்பி! அவர் ஆச்சரியப்படுகிறார், நான் எங்கே ஏசினேன்! பேசினேன்! என்கிறார்.

அவர் பேசுவது ஏசுவதுபோலத் தெரிகிறது உனக்கு. காரணம்? வேறுவிதமாகவும் அவருக்குப் பேசத்தெரியும் என்று நீ எண்ணிக்கொள்வதுதான்.

இதனைப் புரிந்துகொள் தம்பி! புகையிலைக்கு யாரும் நெடியை ஊட்டத் தேவையில்லை; இயற்கையாகவே இருக்கிறது.

புகையிலையிலே பூமணம் எதிர்ப்பார்ப்பது, யாருடைய தவறு, தம்பி!

காமராஜரிடம் வேறுவிதமான பேச்சை எதிர்பார்ப்பது உன் தவறு!

அறுபத்தேழில்....!

காங்கிரசின் பேயாட்சி, மக்கள் தம்மை
காட்டாட்சி தர்பாரால் வதைக்குதையோ!
ஏங்குகிறார் பிடிகவளம் இன்றி! அந்தோ
இரக்கின்றார், தற்கொலையில் இறக்கின்றார்கள்!
ஓங்கிவரும் சோஷலிச பேச்சு யாவும்
ஓட்டுகளைப் பெற்றுநமை ஆண்டியாக்கும்!
ஆங்கிலநாட்டார் ஆண்டார்! சுரண்டல் என்றோம்!!
ஐயையோ! காங்கிரசோ கொள்ளைக் கூட்டம்!

கழகந்தான் ஆட்சியிலே இருக்குமாகில்,
கண்டிக்கும் தீமைகளைக் களையும் அன்றோ!
பழகுதமிழ் மணங்கமழும்! பண்பும் ஓங்கும்!!
பசிபஞ்சம் லஞ்சப்பேய் பாரில் நீங்கும்!
நிதிநீதி யொடுநேர்மை யாவும் ஓங்கும்!
நீள்தூர டெல்லியிடம் உரிமை கோரும்!
துதிபாடல் அதிகாரம் குறைகள் குன்றும்!
துயரற்ற நல்வாழ்வின் வழிபிறக்கும்!

திட்டத்தின் பலன்யாவும் கொழுத்தவர்க்காம்,
திண்டாட்டம் நமக்கென்றே உணர்ந்து விட்டோம்!
கொட்டங்கள் கொஞ்சமல்ல; அரசின் போக்கில்,
கொடுங்கோன்மை, லஞ்சஊழல் பெருகிற்றன்றோ
சட்டங்கள் வளையுதடா 'கதரை'க் கண்டால்!
சதிராட்டம் போடுதடா சுரண்டல் குப்பல்!
சட்ட அவை கழகத்தார் கையில் வேண்டும்
சர்ச்சைக்குக் காங்கிரசார் எதிரில் வேண்டும்!!

—ஓவகுடி சாம்பு.

பஞ்சைகள் எதிர்ப்பு பதைக்கச் செய்கிறது!

அவருக்குத் தெரிந்த முறையில் அவர் பேசுகிறார்—அவ்வளவுதான்.

இது எனக்குப் புரிந்திருப்பதால்தான் தம்பி! அவருடைய பேச்சு எனக்குக் கோபத்தையோ, வருத்தத்தையோ தரவில்லை.

மேலும் தம்பி! நாம் என்ன அவ்வளவு 'மேலான' நிலையினரா?

மெருகுகலையாத மோடாரிலா சவாரி செய்கிறோம்.

மாளிகைகளிலா நமக்கு விருந்து நடக்கிறது.

அதிகாரிகளா நம்மைப் புடைசூழ்ந்து நிற்கிறார்கள்.

'செக்கு'களையா நம்மிடம் தருகிறார்கள்—நன்கொடையாக. இல்லையே! நாம் எளிய நிலையினர்; எளியோருக்காகப் பணியாற்றுகிறோம். நம்மைக் கண்டதும், மதிப்பளிக்கவேண்டும், மரியாதை காட்டவேண்டும் என்று பெரியவருக்குத் தோன்றுமா!

மகாராஜாக்கள் மண்டியிடுகிறார்கள்; ராஜாக்கள் உபசாரம் நடத்துகிறார்கள்; இந்தப் பயல்கள் எதிர்க்கிறார்களே என்று எண்ணுகிறார்; எரிச்சல்கொள்கிறார்.

இவ்வளவு செல்வம் செல்வாக்கு, அதிகாரம் அந்தஸ்து நம்மிடம் இருக்கிறது, பஞ்சைகள் நம்மை எதிர்க்கிறார்களே என்பதை எண்ணும்போது அவருக்கு ஏகப்பட்ட எரிச்சல் மூள்கிறது.

சிரங்கு பிடித்தவன் அரிப்பை அடக்கிக்கொள்ள வேகவேகமாக 'சொரிந்து'கொள்ளும்போது, பூசிக்கொள்ள சந்தனம் கொடுத்துப்பாரேன், சள்ளென்று எரிந்துவிழுவான். மனித சுபாவம் அது. அதனை உணராமல், ஏசுகிறாரே என்று வருத்தப்படுகிறாய்.

அதுமட்டுமா தம்பி! ஏசுகிறார் என்கிறாயே! இது என்ன முதல் முறையாகவா உன் காதிலே விழுகிறது! அல்லது ஏசக்கிளம்பிய முதல் மனிதரா இந்தக் காமராஜர்.

கழகம் தொட்டிலில்இருந்த நாள்தொட்டு
ஏசினர் பலர்; இவரைவிடக் கடுமையாக.

பழகிக்கொள்ளச் சொல்லுகிறாயா அண்ணா! என்று கேட்கிறாய். அதற்காகச் சொல்லவில்லை.

இவ்வளவு ஏசிவருகிறார்களே இவர்கள், அது நம் வளர்ச்சியைத் துளியாவது கெடுத்ததா?

இவர்களின் ஏசலை மக்கள் மதித்திருந்தால் கழக வளர்ச்சிக்கு இந்த அளவு துணை நின்றிருப்பார்களா?

கழகம் பெற்றுள்ள வளர்ச்சி என்ன இலேசானதா?

எத்தனை இடிகளை, தாக்குதல்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறது!

எத்தனை சாகசத்தைக் கண்டும் நிலை குலையாமல் இருந்து வருகிறது.

எத்தனை எத்தனை சதிச் செயல்களைக் கண்டிருக்கிறது; சாய்த்திட முடியாத நிலையைப் பெற்றிருக்கிறது.

இதிலிருந்து தெரியவில்லையா, இவர்கள் ஏசுவது, வீண்வேலை என்பது!

மழை பெய்கிறதே என்று கவலை கொண்டு குன்று, குடை பிடித்துக் கொள்ளுமா!!

தம்பி! அவர்கள் ஏசுவது நம்மை எந்தவிதத்திலும் பாதித்ததில்லை; பாதிக்கவில்லை; பாதிக்காது.

மேலும் தம்பி! கழகம் விடுத்திடும் அழைப்பு என்ன? எல்லோரும் பாராட்டுவார்; எங்கிருந்தும் புகழ்மொழி கிடைத்திடும். பெற்றிட வருக! பெருமகிழ்வு கொண்டிட வருக!!—என்றா அழைக்கிறது. இல்லையே!

ஏசுவர்—பொருட்படுத்தாதீர்.

தாக்குவர்—தாங்கிக் கொள்வீர்!

ஏஜண்டுகள் தேவை

மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனைசெய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17

S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.

D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.

K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.

இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில் [மணப்பாறை.

சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம்.

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: சுலைமான்

மலையாள வைத்தியசாலை,

நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3

எரிச்சல், வேதனை-இதயத்தில் நிரம்ப!

சிறையில் தள்ளுவர்—அதனை அறச்சாலை எனக் கொள்வீர்.

இஃதன்றோ கழகம் விடுத்திடும் வேண்டுகோள்!

இந்த வேண்டுகோளைக் கேட்டன்றோ கிளம்பினர் பணி புரிய ஆயிரமாயிரம் தோழர்கள்.

குத்தும் வெட்டும் கிடைத்தது—சிலருக்கு.

தடியடி கிடைத்தது—பற்பலருக்கு!

கஞ்சிக் கலயம் கிடைத்தது— பலருக்கு—சிறையினிலே!

இன்னுயிரே பறிக்கப்பட்டது—சிலருக்கு—நமது வணக்கத்துக் குரிய வீரர்க்கு.

இவ்வளவு இன்னலையும் இன்முகத்துடன் ஏற்றனர் தோழர்கள்.

கண்ணிழந்தோர் உளர், அறிவாயே!

காலிழந்தோர், கரமிழந்தோர் உளர், தெரியுமே உனக்கு!

சொத்திழந்தோர் சுகமிழந்தோர் உளர்—பலர்—நமக்காக—நாட்டுக்காக.

மக்கள், தம்பி! இதனைத்தான் கணக்கெடுத்து வைத்துள்ளனர்; எவரெவர் என்னென்ன ஏசினர் என்பது பற்றி அல்ல!

ஏசுவோர் ஏசட்டும், எமதருமைத் தோழர்களே! இருக்கின்றோம் நாங்கள் தொகைதொகையாய், ஆதரவு தந்திடவே என்கிறார் மக்கள். இஃதன்றோ உன் உளத்தில், இருந்திடவேண்டும், ஊசல் சரக்காகிப்போன ஏசல் மொழியா!!

ஏசுகின்றனர், அதனால் நமது கழக வளர்ச்சி குன்றிடுவதில்லை, உணருகிறோம்; ஆயினும் அண்ணா! எரிச்சலாக இருக்கிறதே; வருத்தமாக இருக்கிறதே என்கின்றாய்.

இத்தனைப் பெரிய உயரிடம் கிடைத்திருக்கிறதே காமராஜப் பெரியவருக்கு, அவர் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது என்று எண்ணிக் கொள்கிறாய். ஏமாற்றமும் எரிச்சலும், வேதனையும் துளைக்கிறது அவர் மனதை; அறிவாயா!

காங்கிரசைக் கட்டுப்பாடுள்ளதாக நடத்திச் செல்வதில் வல்லவர்—இது புகழ்மாலை.

பிளவுகளைத் தடுத்திடுவார், பேதம் ஒழித்திடுவார்—இப்படிப் பாராட்டுதல்!

எந்தப் பிரச்சினையையும் எளிதாகத் தீர்த்திடுவார்; கூர்த்தமதி படைத்தார்—இப்படித் திருப்புகழ்.

சரி! தம்பி! திருப்புகழ் தித்திப்பாகத்தான் இருக்கிறது; ஆனால் உண்மை நிலைமை என்ன?

கேரளத்திலே காங்கிரஸ் இரண்டு துண்டு.

வங்கத்திலே காங்கிரசில் பிளவு.

ஒரிசா காங்கிரசில் ஒரு வெடிப்பு.

பீகார் காங்கிரசுக்கு முட்டுக் கொடுக்க ஏற்பாடு.

ராஜஸ்தானத்துக் காங்கிரசில் ரகளை

ஆந்திரக் காங்கிரசில், இரு படைவரிசைகள்.

உத்திரப்பிரதேசப் பிரச்சினையின் இலட்சணமோ உலகறியும்!

இவை எதனைக் காட்டுகின்றன தம்பி! காங்கிரசைத் திறமையாக நடத்திச் செல்லும் ஆற்றல் மிக்கவர் காமராஜர் என்பதனையா!

இவர் பார்வை பட்டால் போதும், பிளவுகள் மூடிக்கொள்ளும் என்றார்களே, பிளவு எத்தனைப் பெரிய அளவு விரிவாகிக்கொண்டு போகிறது பார்த்தனையா?

இவர் கூப்பிட்டுப் பேச வேண்டியதுதான், உடனே 'குடுமிப்பிடி'ச் சண்டையிட்டுக்கொண்டோரும், கட்டித் தழுவிக்கொள்வர்; ஒன்றுபடுவர் என்றனர்.

"திராவிட பூமி"

(தி. மு. க. கேரள கமிட்டி வெளியிடும் மலையாள வார இதழ்)

தென்னக மக்களின் அவலநிலையை எடுத்துக் காட்ட குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட கேரளத்தின் குரலை வெளிக்காட்ட பவனி வரும்

"திராவிட பூமி"

1966 செப்டம்பர் மாதம் அறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் வெளியிடப்படும்.

ஆசிரியர் குழு :

M. N. புருசோத்தமன், M. A.
M. A. மசூது,
H. M. சாலி.

விபரங்களுக்கு :

"திராவிட பூமி"
(மலையாள வார இதழ்)
திருவனந்தபுரம் 8, : : கேரளா.

ஏத்தித் தொழுவதன் இலட்சணம் இதுவா?

கேரளத்துக்குப் போயே பார்த்தார்—பலித்ததா!

இவர்கேரளம்சென்று சங்கர் என்பாரைப் பட்டத்தரசர்போலாக்கினர்! பலன்? காங்கிரசே இரு துண்டுகளாகிவிட்டன. தடுத்திட முடிந்ததா? ஒற்றுமை உண்டாக்க முடிந்ததா?

இந்தப் பிளவுகளெல்லாம் எம்மை ஒன்றும் செய்துவிடாது என்று பேசலாம்; பேசுகின்றனர்; அது வீருப்பு! ஆனல் கேட்கப்படும் கேள்வி வேறு—இவருடைய திறமை காரணமாக, காங்கிரசில் பேதம் நீங்கி, பிளவு நீங்கி, ஒற்றுமை ஏற்படும் என்று கூறினர்களே, நடந்ததா என்பதுதான். இல்லை! அப்படியாயின், இவருடைய திறமைபற்றிய திருப்பல்லாண்டு பாடுவதன் பொருள்?

போகட்டும் தம்பி! கட்சியிலே ஏற்பட்டுவிடும் பிளவுகளைத் தடுத்திட முடியாமலிருக்கட்டும், காங்கிரஸ் கட்சியின் ஒப்பற்ற தலைவர் என்கிருர்களே, ஒரு பிரச்சினையிலாவது திட்டவட்டமான கருத்து, காங்கிரசில் உள்ள மற்றவர்களை வழி நடத்திச் செல்லத்தக்க விதமான கருத்தளிக்கும் போக்கு காண்கின்ருயா?

இதுநாள் வரையில் — ஊரே கொதிக்கிறது ரூபாய் மதிப்புக் குறைப்புபற்றி—இவர் அதுபற்றி ஒரு விளக்கம் கொடுத்தாரா?

இவருடைய ஒப்புதலின் பேரில் நடந்தேறியதா, இவரை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பிரதம மந்திரி இதை அமுலாக்கினர்களா? அதற்கான விளக்கமாவது கிடைத்ததா!

நாணயத்தின் மதிப்பைக் குறைத்திடும் பிரச்சினை இவர் கவனிக்கத் தேவையற்ற அற்பப் பிரச்சினையா! அறிவற்றவன்கூட அவ்விதம் கூறிடானே! கருத்தளித்தாரா, இது வரையில் காணேம்! ஏன்?

மானத்தோடு வாழ்வோம், அன்னிய நாட்டிடம் உணவுக்காகக் கை ஏந்தமாட்டோம் என்று முழக்கம் எழுப்பினர்; எழுப்பிய முழக்கம் 'பிளேட்' ஆக்கப்பட்டுவிட்டது.

கப்பல் கப்பலாக உணவுப் பொருள் அமெரிக்காவில் இருந்து வந்தவண்ணம் இருக்கிறதே—என்ன மதிப்பு அளிக்கப்பட்டது இவருடைய மானத்தோடு வாழ்வோம் என்ற முழக்கத்துக்கு இதுபற்றிய கருத்து விளக்கம் தருகிருரா? இல்லை! ஏன்? தந்திடின் இந்திராகாந்தி சர்க்காருடன் மோதிக்கொள்ளவேண்டி நேரிடும்! அதற்கு இவர் தயாராக இல்லை! காரணம்? என்ன ஆகுமோ என்ற அச்சந்தானே!

உரத்தொழில் சம்பந்தமாக அன்னிய நாட்டுக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள், அக்ரமமாக இருப்பதாகக் கருத்தறிவித்தார். இவரை நம்பிக்கொண்டு சில தலைவர்களும் அந்த ஒப்பந்தங்களைக் கண்டித்தனர். ஆனல் காங்கிரஸ் சர்க்கார், இவர் பேச்சை மதித்து நடந்ததா? இல்லை! அன்னியக் கம்பெனிகளுக்குச் சலுகைகள், தந்து ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டன. என்ன செய்கிருர்?

பிரச்சினைகள்பற்றி கருத்தறிவிப்பதே அத்திபூத்தது போல! அப்படி அவர் அறிவித்திடும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; மதிப்பளிக்கப்படுவதில்லை; அவர் கூறிடும் கருத்துக்கு முற்றிலும் முரணகக் காரியங்களைச் செய்துகொண்டு போகிருர்கள்.

ஏகப்பட்ட பணத்தைக் கொட்டி ஐந்தாண்டுத் திட்டத்தை நடத்துவது தவறு என்று கூறி, நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தொகை குறைக்கப்பட்டாக வேண்டும் என்று காங்கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்தபோதே பேசினர்.

நடந்தது என்ன? இவர் பேச்சை ஏற்றுக்கொண்டார்களா? பாரேன், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்காக எவ்வளவு பெரிய தொகை செலவிடப் போவதாக அறிவித்திருக்கிருர்கள் என்பதை!

எந்தக் கருத்தை ஏற்ருர்கள்? ஏத்தி ஏத்தித் தொழுகிருர்களே, எமது காமராஜர்தான் இப்போது இந்தியாவையே நடத்திச் செல்கிருர் என்று; இதுதான அதற்கான இலட்சணம்.

பாராட்டுதலைப் பெறுவதோடு திருப்திப்படச் சொல்லுகிருர்கள்.

பவனி வருவதிலே மகிழ்ச்சி பெறச் சொல்லுகிருர்கள்.

கொள்கை – திட்டம் – நிர்வாகம் இவைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறேம் என்கிருர்கள்.

இந்த நிலைமை காமராஜரின் மனசிலே எவ்வளவு வேதனையை உண்டாக்கும் என்பதனை உணர்ந்திடின் தம்பி! அவருக்கு ஏன் எரிச்சல் ஏற்படுகிறது என்பது புரிந்துவிடும்; அது புரிந்துவிட்டால், அவர் ஏசுவது அவர் தமது எரிச்சலை அடக்கிக் கொள்வதற்கே என்பதும் புரிந்திடும்.

பாடம் கிடைக்கும்!

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது, துப்பாக்கிகள் முழங்கியபோது, தங்களது கணவன்மார்களைஇழந்த அபலைப் பெண்கள் 'ஐயோ அத்தான்!' என்று கூவி அழுதார்களே, அப்போது அறுத்தெறியப்பட்ட தாலி--அழிக்கப்பட்ட பொட்டு--அவிழ்த்துவிடப்பட்ட கூந்தல்--அள்ளியெறிப்பட்ட மலர், தக்க பாடம் புகட்டாமலா விட்டுவிடும் 1967 தேர்தலில்?

மாஸ்கோ போனால்என்ன, மன்னார்குடி சென்றால் என்ன, அவருக்கு உள்ள எரிச்சல் தீருவதாகக் காணோம்.

நாடு பல சுற்றிவிட்டுத் திரும்புகிறார், காலடி கீழே வைத்ததும் அவர் காதில் என்ன விழுகிறது? **அமீன்சந்த்! அமீன்சந்த்!** என்று மக்கள் பேசிக் கொள்வது.

என்ன இழவு இது, இந்த அமீன்சந்த் விவகாரம் என்று கேட்கிறார்! விவரம் கூறுகிறார்கள், வேதனை குடைகிறது.

வேதனை வெளியே தெரியாதிருக்க என்ன செய்ய வேண்டும்? யார் மீதாவது பாயவேண்டும். யார் மீது பாய்வார்?

ஏனய்யா இப்படியெல்லாம் வம்புகளை விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்கள். மக்களின் மனம் ஏற்கனவே குமுறிக் கொண்டிருக்கிறது. நாள் தவறாமல் ஒரு பிரச்சினை கிளம்புகிறதே! ஏன்?—என்று கேட்க வேண்டும்; அமைச்சர்களை! கேட்டால் சும்மா இருப்பார்களா? சிக்கலான கேள்வி!!

எனவே என்ன செய்வது? எரிச்சலைக் குறைத்துக் கொள்ள கழகத்தை ஏசுவது!! எளிதான காரியம்! சுவையான காரியம்! பழக்கப்பட்ட காரியம்! ஆகவே அதனைச் செய்கிறார்!

ஏசுவது பொருளற்றது, பயனற்றது, நெடுநாட்களாக நடந்துவருவது என்பதனை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே கவலைகொண்டிட வேண்டிய நிலை நமக்கு இல்லை.

யாழோ குழலோ வாசித்திடின், இராக இலட்சணம் பற்றிக் கவனிக்கலாம்.

கலகலத்துப்போன போக்கு வண்டி கிளப்பிடும் ஓசை, என்ன இராகத்தில் அமைந்திருக்கிறது என்று ஆராய்ந்திடப்போமா!

அண்ணன்,



மூச்... இது! இரகசியம்

விரைவில் சோஷலிச சமுதாயத்தை நிறுவி விடவேண்டும் என்று இக் கிழமை தொடக்கத்தில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தன் ஆசையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

காமராசரோ, தன்னைத்தான் சோஷலிசப் பிதா என்று இந்தியநாடு பூராவும், கூறக் கேட்டு, அந்தப் புகழ்ப் போதையில், பேசுவது என்ன? எங்கிருந்து பேசுகிறோம் என்பது கூடப் புரியாத தன்மையில், ஏதேதோ **சோஷலிசத்தைப்** பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.

காங்கிரஸ் அமைச்சர்களும், முச்சந்தி, நாற்சந்தி காங்கிரசுக்காரர்களும் **சோஷலிசம்** என்பதைப்பற்றி எந்த அளவுக்கு அவர்களுக்குத் தெரியுமோ, எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்களோ அந்த அளவுக்குப் **பேசிக்கொண்டிருக்கிறார்கள்.**

சோஷலிச சமுதாயம் பற்றியும், கோட்பாடுபற்றியும் கூறிவிட்டு, கடைசியாகக் காமராசரை, **'சோஷலிசப் பிதா'** என்று விளித்துத் தங்கள் நுண்ணறிவை வெளிப்படுத்திக் கொள்ளவும் தவறுவதில்லை.

மொத்தத்தில், சோஷலிசக் கொள்கையைத் தாங்கள்தான் கண்டுபிடித்து வைத்திருப்பவர்கள் போலவும், அவர்களாலேயே இந்நாட்டில் சோஷலிச சமுதாயம் அமைக்கப்படப்போவது போலவும் பேசிக்கொண்டும், சந்தர்ப்பங்களில் எழுதிப்பார்த்துக்கொண்டும் வருகிறார்கள்.

காங்கிரசாரின் சோஷலிசம் எத்தன்மையானது! எப்படி எப்படிபோலித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது என்பதற்குப் பல உதாரணங்கள் காட்டி இருக்கிறோம்.

சோஷலிச சமுதாய அமைப்பிற்குக் காங்கிரஸ்காரர்கள் என்ன திட்டங்கள்--வழிமுறைகள்--வைத்திருக்கிறார்கள் என்றும் பலமுறை கேட்டிருக்கிறோம்.

எப்போதுமே காங்கிரஸ்காரர்கள் அதிகம் பேசமாட்டார்கள் (பேசினால் ஐயையோ!) **செயல் வீரர்கள் அவர்கள்!!**

நம் வினாக்களுக்கான விடைகளை, அவர்களது பேச்சிலிருந்து நம்மால் பெறமுடியவில்லை! (இதுவரையில்!)

செயல் வீரர்களது செயல் வடிவத்தில் இப்போது ஒரு வினாவிற்கு விடை கிடைத்திருக்கிறது!

சோஷலிச சமுதாய அமைப்பிற்குக் காங்கிரசின் திட்டமென்ன? வழிமுறை என்னென்ன?

இது வினா; (செயல்பூர்வமான) விடை இது!

மோதிலால் மூல்சந்த் தர்ங்கதாரா	ரூ 15.00	லட்சம்
மைதின் குஞ்ச்	ரூ 19.67	”
பதம் சந்த் & கோ	ரூ 18.25	”
ராஜா காளிபிரசாத்சிங்	ரூ 14.28	”
முல்லா லட்சுமி நாராயணசாமி	ரூ 18.70	”
பிகாரிலால் ராம்சரண்	ரூ 30.41	”

காங்கிரசுக்குக் கொடுக்கப்பட்ட தேர்தல் நிதியின் கணக்கு என்று நினைக்கிறீர்களா! அப்படிப்பட்ட செய்திகள்தானே இதுவரையில் கிடைத்தது. ஆகவே நீங்கள் அப்படி நினைக்கக் கூடும்.

'வரிகொடு வரிகொடு' என்று நீங்கள் கசக்கிப் பிழியப்படுகிறீர்கள். "நீங்கள் வரிகொடுக்க வேண்டாம்" என்று மேலே கண்ட 6 பேருக்கும் வரி பாக்கியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் காங்கிரஸ் ஆட்சியினர்! சோஷலிச சமுதாய அமைப்பாளர்கள்!!

116:31 லட்சம்! வரிபாக்கித் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வேறு விதமாகச் சொன்னால் **1 கோடியே 16 லட்சத்து 31 ஆயிரம் ரூபாய்!**

காரணம் தெரியுமா?

இவர்களிடம் இந்த வரி பாக்கியை வசூலிக்கப் போதுமான சொத்துக்கள் இல்லையாம்!

எப்படி இவ்வளவு நிலுவை ஏற்பட்டது என்கிறீர்களா?

அதுதான் காங்கிரஸ் வெற்றியின்--சோஷலிச அமைப்பின் இரகசியம்!

4-ம் பக்கத் தொடர்ச்சி

குனிந்துகொள்ளத்தான் செய்வார்கள், 'புதுசுகள்' மார்தட்டும்; பார்! பார்! கிரசின் எண்ணெய் கிடைக்கவில்லை என்று எதிர்க்கட்சிகள் குறைகூறுகின்றனவே; எவ்வளவு தாராளமாகக் கிரசின் கிடைக்கிறது பார்! — என்று இந்தச் சம்பவத்தைப்பற்றிப் பேசிப் பொங்கி வழிவார்கள்!

14. கொடைக்கானலில், ஷேக் அப்துல்லா என்ன செய்துகொண்டிருக்கிறார்?

தமிழ் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டு வருவதாக, ஜெயப்பிரகாஷ் நாராயணன் தெரிவித்திருக்கிறார்.

15. காங்கிரஸ் ஆட்சியிலே தொழில் பெருகிவிட்டிருக்கிறது என்கிறார் ஒரு பிரசாரகர், உண்மையா?

உண்மைதான்! இதற்கு முன்பு இல்லாத அளவு கள்ளச் சாராயம காய்ச்சும் தொழில் பெருகிவிட்டிருக்கிறதே, மறந்துவிடலாமா? அதைத்தான் பிரசாரகர் கவனப்படுத்தியருக்கிறார்!

16. பருத்தி பயிரிடுவதைக் குறைத்துக் கொள்ளும்படி அமெரிக்கா யோசனை சொல்லியிருக்கிறதாமே, ஏன்?

இதுவரையில், இந்தியருக்கு நாஙகள்தான் சோறு போடுகிறோம் என்று சொல்லிக்கொள்கிறாகள். இது போதாது என்று இனி இந்தயர்களின மானத்தைக் காப்பாற்ற நாஙகள் துணிக்குத் தேவையான பருத்தி கொடுக்கிறோம் என்று உலகுக்குக் கூறி இந்தியாவின் மானததை வாங்க, அமெரிக்கா திடடமிட்டிருககிறதுபோலத் தெரிகிறது.

17. எந்த அரசியல் கட்சியிலும் சேராமல், எல்லா அரசியல் கட்சிகளையும் கேலி செய்யும பழக்கம சிலருக்கு இருககிறதே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்?

வேடிக்கையான போக்கு! தன் தலையை மொட்டையாக வைத்துக்கொண்டு, மற்ற தலைகளில் பேன் குத்தக் கிளமபுவது போன்ற வேடிக்கை இது.

18. இந்தி ஆதிக்க அபாயம் அடியோடு நீங்க என்ன வழி?

அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் காங்கிரஸ் தோற்கடிக்கப்படுவது ஒன்றுதான், இந்தி ஆதிக்க அபாயத்தை ஒழித்துக்கட்டுவதற்கான ஒரே வழி.

19. காங்கிரசில் சேருகிறவர்களிலே எப்படிப்பட்டவர்கள் 'மள மள'வென்று முன்னேறமுடியும்?

திருப்புகழ் பாடத் தெரிந்தவர்களும், காவடிச் சிந்திலே வல்லவர்களும் வெகு வேகமாக முன்னேறலாம்; பழைய காங்கிரஸ்காரர்கள் கூடப் பார்த்து மனம் புழுங்கும் அளவு வேகமாக!!

20. இந்த வருடமாவது உணவு நெருக்கடி ஏற்படாமலிருக்குமா?

எப்படிச் சொல்ல முடியும். இந்த வருடம் நாட்டுக்கு மொத்தம் எவ்வளவு உணவுப் பொருள் தேவைப்படும், கணக்கு இருக்கிறதா? என்று **செழியன்** கேட்ட கேள்விக்கு, காங்கிரஸ் சர்க்கார், அந்தக் கணக்கு எங்களிடம் இல்லை என்றல்லவா பதில் தந்திருக்கிறது. எவ்வளவு உணவுப் பொருள் தேவை என்ற தகவலே சர்க்காரிடம் இல்லையே, இந்த சர்க்காரின் நிர்வாகத்தில் இந்த வருடம் உணவு நெருக்கடி ஏற்படாது என்று எப்படித் தைரியமாகச் சொல்ல முடியும்.

S.S.S. BROTHERS
QUALITY BLOCK MAKERS
SHIFTED TO
180 ANNA PILLAI ST.,
MADRAS-1.

21. ராஜாஜி கருப்புக் கண்ணாடிபோட்டுக்கொள்கிறார் என்று காங்கிரஸ் பேச்சாளர் ஒருவர் கண்டபடி பேசுகிறார், நியாயமா?

பேச்சு நியாயமல்ல என்பதைக் கேள்வியிலேயே காட்டிவிட்டிருக்கிறீரே, — **கண்டபடி பேசுகிறார்** என்று குறிப்பிட்டு. அந்தப் பேச்சாளா உமக்குத் தெரிந்தவராக இருந்தால் சொல்லிவையுங்கள், சில வேளைகளில் பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் கூடக் கருப்புக் கண்ணாடி போட்டுக் கொள்கிறார்கள் என்ற வவரத்தை.

o

பயணம் செய்யும் நகரம்!

நகரம் பயணம் செய்கிறதா? ஆம், ஒரு நகரமே இடம்விட்டு இடம் பயணம் செய்கிறது. இந்த அறபுதம் சோவியத் யூனியனில் நடக்கிறது.

இந்த நகரத்திலுள்ள ஒரு வீட்டை வெளியிலிருந்து பார்த்தால் பெரும்பாலும ஒரு ரயில் பெட்டிபோலதான் தோன்றும். ரயில்பெட்டி சககரங்களின்மேல் அமைந்திருக்கிறது; இநத வீடு உறுதியான உருக்குச் சட்டங்களின்மேல் பொருததபபட்டிருக்கிறது; அவ்வளவுதான் வித்தியாசம் என்பதுபோல் தோன்றும. ஆனால் நீங்கள் நுழைந்துபாாத்தால், ஜன்னலகள், மேஜை நாற்காலிகள், மின் விளககுகள் முதலிய சகல வசதிகளையுமகொணட ஒரு நேர்த்தியான வீடு அது என்பதை உணர்வீாகள்,

அந்த வீட்டிலிருப்போர், மழை, காற்று, பனி முதலிய எதைப் பற்றியும் கவலைபபட வேண்டியதிலலை. ஏனெனில் அந்த வீட்டில் சுவர்கள், தளம், கூரை முதலியனவெல்லாம் எந்தக் கால நிலையையும் சமாளிக்கும் முறையில அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டைச் சுற்றி இதேமாதிரி இன்னும் பல வீடுகள். அவறறிலே சில குடும்பததினா வாழ்வதற்கு, சில பிரம்மசசாரிகள் வாழ்வதற்கு. இதலலாமல் கிளப், உணவுக்கூடம, கடை, குளிப்பு அறை, கிட்டங்கி, மின்நிலையம் முதலியவற்றிற்கு ஏற்றவாறும் வீடுகள் கட்டடப்பட்டுளளன. இவறறை நிாமாணிதத இஞ்சினீயர்கள் ஒரு நகரத்தை மனதிற்கொண்டு செய்திருக்கிறாகள. இதில் எல்லாவிதமான வசதிகளும் இடம் பெற்றிருக்கின்றன. நடனக்கூடம், பூபபாத்திகள முதலியன கூட இருககின்றன.

2—14

மதம் பிடித்த யானை

குலசேகரனைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டியிருப்பதாகக் கனகசேனன் கூறியதைக் கேட்டதும், திருமேனி பெருத்த அதிர்ச்சி அடைந்தாள்.

"குலசேகரனைப் பிடித்துக் கட்டிவிட்டேன் என்றால், எதற்காக இவள் கவலையடைய வேண்டும்!" என்ற சந்தேகத்தோடு அவள் பார்வையை அவன் ஊடுருவிப் பார்த்தான்.

அவனது பார்வையின் பொருளைத் திருமேனி சட்டென்று புரிந்துகொண்டு 'எங்கே இருக்கிறார் அவர்?' என்று மேலும் மிகவும் வருத்தமடைபவளைப் போல வினவினாள்.

"அங்கே ஒரு புளியமரத்தில் கட்டியிருக்கிறேன், அந்தக் கயவனை!" என்று அரும்பு மீசையைத் தடவிக் கொடுத்துக் கொண்டே பெருமிதத்தோடு சொன்னான்.

"அய்யோ! நான் என்ன செய்வேன்! புவியாளும் அந்தப் பூமானைப் புளியமரத்தில் பிடித்துக்கட்டி விட்டானாமே இவன்! என்னென்ன எண்ணுகிறாரோ? எரிமலையெனக் குமுறுகிறதோ, அவர் மனம்! அதை நினைத்தால், அனல்பட்ட மெழுகாய் உருகுகிறதே என் பெண் மனம்!' என்று சோகத்தோடு சொல்லிக்கொண்டே, முன்றானையை எடுத்து கண்ணீர் வராத தன் கண்களை மெதுவாகத் துடைத்தாள்.

பைத்தியம் உளற ஆரம்பித்துவிட்டது என்று வெறுப்போடு அவளைப் பார்த்து, அலட்சியமாகச் சிரித்தான்.

"அடுப்புபோல் என் மனதில் கவலை புகைவிடுகிறது — அருவி போல் கண்களில் நீர் கொட்டுகிறது —நீ என்னடா என்றால், புலிக்குட்டிகளை இழுத்துப் பிடித்துக் கொண்டு, பூரிப்போடு சிரிக்கிறாய்! உன் மனம் என்ன கல்லால் ஆனதா அல்லது கரும்பொன்னால் ஆனதா?

"கேட்டதும் சிரிக்கவேண்டிய, மகிழவேண்டிய செய்தியை நான் சொன்னால், கோவலனை இழந்த கண்ணகியைப்போலப் புலம்ப ஆரம்பித்துவிட்டாயே, திருமேனி!' என்று கூறிவிட்டு, புலிக்குட்டிகளைப் பக்கத்திலிருந்த மரத்தில் கட்டிவிட்டு அவள் அருகே வந்தான்.

முன்பு புலிக்குட்டிகளின் தலையில் போடக் கல்லைத் தூக்கப் போனபோது கையிலிருந்த நாகலிங்கப் பூவைக் கீழே போட்டுவிட்டாள். அவன் அருகே வருவதைக் கண்டதும் பார்வையை தாழ்த்தினாள். மண்ணில் நாகலிங்கப் பூ கிடந்தது. அதைக் குனிந்து எடுத்தாள். மாலை நேரமானதால் அப்பூவின் இதழ்கள் பொலபொலென உதிர்ந்துவிட்டன.

பூவின் காம்பைத் திருகிக் கொண்டே, அதன் நடுவே தலை தூக்கியுள்ள நாகம் படமெடுத்தது போன்ற பாகத்தைப் பார்த்தபடி ஓரவிழிகளால் கனகசேனனைக் கவனித்தாள்.

"களிக்கவேண்டிய செய்தியல்லவா, அந்தக் காதகன் நம் கையில் சிக்குண்டது? நீ என்னடா என்றால் உடல் குன்றுகிறாய்— உள்ளம் பதறுகிறாய்! சிரி திருமேனி, சிரி? எதிரி என் கையில் அகப்பட்டுக்கொண்டான்?"

'சிரிப்பதா? நானா? கூடாது கூடாது! கூடவே கூடாது!'

'ஏன்?'

'ஏனா? அவர் எனக்குச் சொந்தக்காரர்!'

'அட! அது எனக்குத் தெரியாதே!'

'அட! உனக்கு அது எப்படித் தெரிய முடியும்? நீ என்ன எங்களுக்கு உறவினனா?'

'நான் உனக்கு மிகவும் நெருங்கிய சுற்றத்தான், திருமேனி!'

'சுற்றத்தானா! அல்லசூழ்ச்சியான பேச்சு இது! என்னை ஏமாற்றவே பொய் சொல்லுகிறாய் நீ!'

"என் உறவைப்பற்றித் தள்ளிவிடு–குலசேகரன் எப்படி உனக்குச் சுற்றத்தான்?"

"அதுவா? அது ஒரு திடீர் சம்பவம்! சொன்னால் மயக்கம் போட்டு நீ விழுந்துவிடமாட்டாயே?"

"விழுந்துவிட மாட்டேன்!"

"அப்படியானால் கேள்!......என் அப்பாவின் பாட்டியும், அவர் அப்பாவின் தாத்தாவும் ஒரே தாய் வயிற்றில் பிறந்தவர்கள்! அதை நீ நம்பவில்லையா? நம்பமாட்டாய்–எனக்குத் தெரியும்! ஏனென்றால், அவர்கள் பிறந்ததை நீ பார்க்கவில்லை!"

"ஏன் பார்த்ததில்லை-பார்த்திருக்கிறேன், கவனமும் இருக்கிறது! அப்பொழுது நான் என் அப்பாவின் அப்பாவிற்கு அப்பாவாக இருந்தேன்!" என்று சொல்லி பலமாகச் சிரித்தான், கனகசேனன்.

"சுத்த பைத்தியம்! சுத்த பைத்தியம்! ஏதோ அற்புதமான நகைச்சுவை சொல்லிவிட்டதாக நினைத்துக்கொண்டு தனக்குத்தானே நகைத்துக்கொள்கிறான்! சீ! சீ!" என்று திருமேனி அழகு காட்டினாள்.

"திருமேனி! நான் பொல்லாத கோபக்காரன் தெரியுமல்லவா? என்ன, அவன் இவன் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாய்? மரியாதையோடு பேசு, இல்லாவிட்டால்......"

"என்ன கர்வமடா உனக்கு— கேட்டு என்னிடம் மரியாதை பெற! நான் யார்? நீ யார்? இலங்கை இளவரசியான நான், எவனோ புலிக்குட்டி மேய்ப்பவனைப் பார்த்து,

அடக்க வொடுக்கமாக அவர் இவர் என்று சொல்லவேண்டுமாமே!''

"நீ இலங்கை இளவரசி என்றால் நான் சேரநாட்டு இளவரசன்!''

"சுத்தப் பொய்! எப்படி யென்றால் சேரநாடு என்று ஒன்று இல்லாதபோது, அதற்கு இளவரசன் என்று ஒருவன் எப்படி இருக்க முடியும்!''

"இப்பொழுது நீ நிற்கிறாயே' அது எந்த நாட்டு மண் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய், திருமேனி!''

"இதுவா பாண்டி நாட்டு மண்! பாண்டி நாட்டு அரண்மனையில் தான் இப்பொழுது நாங்கள் தங்கியிருக்கிறோம்! குலசேகரன் எங்களை எப்படிக் கவனித்துக் கொள்கிறார் தெரியுமா?''

"திருமேனி இது பாண்டிநாடு அல்ல—சேர நாடு!''

"சுத்தப் பொய்! சேரநாடு என்று ஒரு நாடு கிடையவே கிடையாது! என் பேச்சை நீ நம்பவில்லை அல்லவா? வா, போகலாம்!''

"எங்கே?''

"எங்கே குலசேகரன் கட்டிவைக் கப்பட்டிருக்கிறாரோ—அங்குதான்! அவரைக் கேட்டால், தெரிந்துவிடுகிறது. சேர நாடு என ஒன்று உண்டா இல்லையா என்று! அவர் என்ன சொல்கிறாரோ, அதைச் சரியென்று ஏற்றுக்கொள்கிறேன்—ஏனென்றால் அவர் என் உறவினர்!'

"உண்மையாகச் சொல்—அவன் சொன்னால் நம்புவாய் அல்லவா?''

"சத்தியமாய் நம்புவேன்!''

"சரி, அப்படியானால்...''

"இதென்ன புற்றரையைக் காட்டுகிறாயே!''

"படு!''

"என்ன?''

"எதற்காக இப்படி அலறுகிறாய் — நான் என்ன வித்தியாசமாகச் சொல்லிவிட்டேன்! படு புற்றரையில் என்கிறேன்!''

"என்ன ஆணவம்?''

"புற்றரை பிடிக்கவில்லையா, சரி, அந்தச் சிற்ப மண்டபத்திலாவது படு!''

"எடா மூடா, என்னிடமா விளையாடுகிறாய்?''

"விளையாடுகிறேனா! இல்லையே! நீதானே கேட்டாய், குலசேகரனைக் கட்டியிருக்கும் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போகும்படி! அந்த இடத்திற்குப் போகவேண்டுமானால், இந்தப் புற்றரையிலோ அல்லது அந்த மண்டபத்திலோ முதலில் படுத்துத்தான் ஆகவேண்டும்!''

"அதெல்லாம் முடியாது!''

"அப்படியானால் நின்று கொண்டே தூங்க உன்னால் இயலுமா? கண் உறங்கினால்தானே, கனவு உலகத்திற்குப் போக முடியும்? திருமேனி, அங்கே ஒரு அதிசயமான புளியமர மிருக்கிறது!''



"அதிசயமான புளியமரமா — அதிலென்ன தேங்காய் காய்க்கிறதா?

"இல்லை. மாங்காய் காய்க்கும்! அந்த மரத்தில்தான் அந்த வஞ்சகனைக் கெட்டியாகப் பிடித்துக் கட்டிவிட்டு வந்திருக்கிறேன்!''

"வீராதி வீரன் இவன்—குலசேகரனைக் கனவில் பிடித்துக் கட்டினானும் புளியமரத்தில்! கனவில் இல்லாமல், உண்மையில் அவரை நிமிர்ந்து பார்க்கவாவது உனக்குத் தைரியமிருக்குமா? அது எனக்குத் தெரியாதா என்ன?''

"இப்பொழுது பேசமாட்டாயா, அப்பொழுது நான் சொன்னதை உண்மையென்றுதானே நம்பிவிட்டாய்?''

"உன் முகத்தில் வீர ஒளி வீசுகிறது—நீ சொன்னதை அப்படியே நம்பிவிட! போடா போ! அப்பொழுதே எனக்குத் தெரியும், சரடு நீ விடுகிறாய் என்று!''

"கெட்டிக்காரிதான் நீ—சமயோசிதம்போலப் பேச உனக்கு நன்றாகத் தெரிந்து இருக்கிறது! திருமேனி...''

"என்ன, இருக்க இருக்க பக்கத்தில் வருகிறாய்? தூரமாகவே நின்று பேசு?''

"திருமேனி நான் வரக்கூடாதா உன் பக்கத்தில்?''

"அட பைத்தியமே, இதென்ன கொஞ்ச ஆரம்பித்து விட்டாய்?''

"நான் கொஞ்சாமல் வேறு யார் கொஞ்சுவார்கள் — நான் தானே உனக்கு மாலையிடப் போகிறவன்!''

"மாலையும் இடவேண்டாம் — காலையும் பிடிக்கவேண்டாம்! உனக்குத் தெரியுமல்லவா — எனக்குக் கோபம் வந்தால், எப்படி மாறிவிடுவேன் என்று! நல்லபடியே சொல்கிறேன், மரியாதையாக இந்த இடத்தைவிட்டுப் போய்விடு!''

"திருமேனி, நான் இருந்தால் இருந்துவிட்டுப்போகிறேன் — முதலில் நீ போய்விடு!''

"என்ன பயங்காட்டுகிறாய்?''

"இது பேய் பிசாசுகள் நடமாடுகிற இடம், திருமேனி!''

"உன்னைப் பார்த்ததுமே, அதை நான் தெரிந்துகொண்டேன்!''

"விளையாட்டிற்காக நான் சொல்லவில்லை திருமேனி—இங்கு பேய்பிசாசுகள் நடமாடுகின்றன!''

"நாம் நடமாடவில்லையா—பாவம் அவைகளும் நடமாடிவிட்டுப் போகட்டுமே! அதற்காக நாம் ஏன் பொறாமைப்படவேண்டும்?''

"பொறாமையினால் சொல்லவில்லை, பயத்தால் சொல்கிறேன்! திருமேனி, பேய் பிசாசுகள் என்ன செய்யும் தெரியுமா?''

"யாரை? என்னையா?''

"ஆமாம்!''

"உன்னால் என்னை ஏதாகிலும் செய்ய முடிகிறதா? செய்துதான் பார்ப்போமே என்று நினைக்கவாவது, தைரியம் வருகிறதா? அப்படிப்பட்ட உனக்கே என்னைக் கண்டால் அச்சமும் நடுக்கமும் ஏற்படுகிறது என்றால், அந்தப் பேய் பிசாசுகள் எம்மாத்திரம் எனக்கு?''

"உன் பேச்சைக் கேட்கக்கேட்க எனக்குச் சந்தேகங்கூடப் பிறக்கிறது!''

"என்னவென்று?'

"உண்மையிலேயே உனக்குப் பைத்தியமா, அல்லது... ...''

"பைத்தியமா — உனக்கா, எனக்கா? ஏதேது, கொஞ்சம் விட்டால் உயர உயர ஏறிக்கொண்டே போகிறாய்? நான் இருக்கும் இடத்தில் உனக்கென்ன வேலை? போகிறாயா இல்லையா? ஏன் நிற்கிறாய்? ஓடிப்போ!'' என்று ஆத்திரங்கொண்டவளைப்போலச் சொல்லிக்கொண்டே அருகில் கிடந்த கற்களை எடுத்து அவன் மீது வீசியெறிய ஆரம்பித்தாள்.

கட்டியிருந்த புலிக்குட்டிகளை அவிழ்த்துக்கொண்டு, கற்களுக்குப் பயந்து, அவ்விடத்தைவிட்டு நடையும் ஓட்டமுமாகச் சென்றான்.

கனகசேனன் சென்ற திசையைப் பார்த்துத் திருமேனி சிரித்துவிட்டு, நாகலிங்க மரத்தினின்றும் மலர்ந்தும் மலராமலுமிருந்த ஒருமொட்டைப் பறித்துக்கொண்டு, ஊரை நோக்கி மானைப்போலத் துள்ளியோடினாள்.

அரண்மனையை அவள் நெருங்கியபோது, இருள் மெள்ள உலகைக் கவ்வ ஆரம்பித்தது.

"அய்யோ? வந்துவிட்டதே இரவு!'' என்று அவள்சோகத்தோடு தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டாள்.

தோழிகளோடு ஆடிப்பாடியும், இயற்கைச் சிரிப்பைக் கண்டு மகிழ்ந்தும் பகல் பொழுதை எப்படியோ ஓட்டிவிடுவாள். ஆனால் இரவுவந்துவிட்டால், அத்துடன் பல எண்ணங்களும் அவள் கன்னியுள்ளத்தின்மீது ஆதிக்கம் செலுத்த வந்துவிடும். சிருங்கார உடல் கட்டிலில் பட்டு மெத்தையின்மீது இருந்தபோதிலும், சிந்தனையோ, காடுமேடுகளில் சுற்றிக்கொண்டிருக்கும்.

அவளுக்கு மட்டுந்தானா, உலகில் எத்தனையோ குமரிப் பெண்களுக்கு இரவு நேரம், இனந்தெரியாத குழப்பத்தையும் பயங்கரமான கற்பனைகளையும் தூண்டிவிடுகிறது.

திருமேனி இரவைக் கண்டு வருத்தமடைந்தாள். ஆனால் அஞ்சலையோ நடுநடுங்கிப் போனாள்.

"இன்றிரவு அந்தக் கயவன் வருவானோ — கர்ணகடூரமாக என்னென்ன பேசுவானோ — என் கற்பைச் சூறையாடுவானோ? என்றகுலைநடுக்கமே, ஒவ்வொரு இரவும் அவளுக்கு இருந்துகொண்டு இருந்தது.

தூமகேதுதான் தன்னைத் தூக்கி வரச்செய்து, சிறைவைத்திருக்கிறான் என்று அஞ்சலை நம்பினாள்.

அவள் அடைபட்டிருந்த மாளிகையோ மிகவும் பிரமாண்டமானது. சலவைக் கல்லால் கட்டப்பட்டு, சித்திர வேலைப்பாடுகள் மிக்கது. அது வஞ்சிமாநகரின் மேற்குப் பகுதியில், ஓர் அடர்ந்த சோலையின் மத்தியிலிருந்தது.

அஞ்சலை அந்த மாளிகையின் அமைப்பு முறையைக் கண்டு கவலை கொண்டாள். பணிவிடை செய்ய பல சேடிகள். பளபளக்கும் பட்டாடைகள், அணிமணிகள் அத்தனையும் அங்கே இருந்தன அவளுக்காக!

ஆனால் ஒரேயொரு குறையிருந்தது. அதுதான் அவளுக்குச் சுதந்திரம் கிடையாது. அந்த மாளிகையிலும் அதைச்சுற்றியுள்ள நந்தவனத்திலும், அவள் எவ்வளவு வேண்டுமானாலும் குதிக்கலாம் கூத்தாடலாம், ஓடலாம் பாடலாம், சுற்றலாம் சுவைக்கலாம் — ஆனால் சோலைக்கு வெளியே அடியெடுத்து வைக்கக்கூடாது.

அவள் எவ்வளவு பேசினாலும் பணிப் பெண்கள் கேட்டனர். ஆனால் அவர்கள் தேவைக்கு அதிகமாக ஒரு வார்த்தைகூட அவளிடம் பேசுவது கிடையாது.

இது வேண்டும் என்று கேட்டால், மறு நொடியே கொண்டு வந்து கொடுப்பார்கள். புறாவிற்குத் தானியம் போட்டாயா, கிளிக்குப் பழம் கொடுத்தாயா, என்று கேட்டால், ஆமாம் இல்லை என்று ஒரே வார்த்தையில் பதிலை முடித்துக்கொள்வார்கள்.

அந்த மாளிகை யாருடையது, தன்னை எதற்காகத் தூக்கிக்கொண்டு வந்து அங்கே வைத்திருக்கிறார்கள் என்ற சந்தேகங்களைக் கேட்டால், அப்பெண்களின் உதடுகள் அசையா. வருத்தமோ சிரிப்போ முகத்தில் இம்மியளவும் இல்லாமல், மரக்கட்டைகளைப் போல மௌனமாக இருப்பார்கள்.

அவர்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும், தன்னைத் தூக்கிக்கொண்டு வரச்செய்து, அடைத்துவைத்திருப்பவன் தூமகேதுதான் என்பதில் அஞ்சலைக்கு எள்ளளவும் சந்தேகமே கிடையாது. பல வழிகளில் தன்னை அடைய முயற்சி செய்தும், முடியாமல் போகவே, கடைசியில் நாடுவிட்டு நாடுகொண்டு சென்று, சிறைவைத்து விருப்பத்தை ஈடேற்றிக்கொள்ளும் இழிச்செயலுக்கும் துணிந்துவிட்டான் என்று அவள் எண்ணினாள்.

ஆசை வெறியோடு தூமகேது தன் கையைப் பிடித்து உடலை வளைக்க வருவான், அப்பொழுது இன்பச்சூடேறிய அவனது மார்பில் கத்தியை நுழைத்து, இரத்த வெள்ளத்தில் உடலை மிதக்கச் செய்யவேண்டும் என்ற வெஞ்சினத்தோடு அவளிருந்தாள். அதற்காக வேண்டியே, தனது கட்டிலறையில் கனி வகைகளும், அவற்றை அறுத்துச் சாப்பிட நல்ல கத்தியொன்றும் எப்பொழுதும் இருக்க வேண்டும் என்று பணிப் பெண்களுக்குக் கட்டளையிட்டிருந்தாள்.

மஞ்சத்தின்மீது இருக்கும்போது ஒரு கனியையும் அந்தக் கத்தியையும் எப்பொழுதும் கையில் வைத்துக்கொண்டே இருப்பாள்.

காதகன் வருவான் கத்திக்குப் பலியாவான் என்று ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் ஆவலோடு அவள் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தாள். ஆனால் அவன்தான் வரவில்லை! மாதம் ஒன்றுக்கு மேலாகியும் அந்த மாமிச மலை, கரும்பு மேனியானைக் காண வரவே இல்லை! அது அவளுக்குப் பெருத்த வியப்பாகவே இருந்தது!

அந்தக் கட்டிலறையில் வெள்ளிச் சங்கிலியில் தொங்கும் தந்த வளையத்தில் கிளி ஒன்று உட்கார்ந்திருக்கும். அந்த அறையினுள் யார் வந்தாலும், உடனே அவர்களின் பெயரைச் சொல்லி அது அழைக்கும்.

'அல்லி! அல்லி! வா! வா''

'கனகா! கனகா! வா! வா!'

'அன்னம்! அன்னம்! வா! வா!'

'முல்லை! முல்லை! வா! வா!'

இவ்வாறு அக் கிளி அழைத்ததிலிருந்து, பணிப்பெண்களின் பெயரை அஞ்சலை தெரிந்துகொண்டாள்.

அந்தக் கிளியைப் பார்க்கும் போதும், அதன் கொச்சைப் பேச்சைக் கேட்கும்போதும் — சோகம் கப்பிய அவள் உள்ளத்தில் சிறிது இன்பம் கசியும்.

அந்தக் கிளியை கையில் வைத்துக்கொண்டு மாலை நேரங்களில் சிறிது நேரங்களில் அவள் பூஞ்சோலையில் சிறிது நேரம் உலவிவிட்டு வருவது வழக்கம். அப்படிச் செல்லும் தினங்களில் ஒருநாள்....

"என்னதான் அதிகாரம் இருந்தாலும், எவ்வளவுதான் பலமிருந்தாலும், இப்படியா அக்கிரமம் செய்வது! எந்த மக்களைக் காத்து பராமரிக்க வேண்டுமா, அதே மக்களை வேட்டையாடினால் — முடிவு என்னவாகும்? யானைக்கு மதம் பிடித்துவிட்டால், ஊரே அல்லோல கல்லோலப்படும்! எதிரில் வந்தவர்களையெல்லாம் அது கொன்றுபோடும்! தன்னை வளர்த்துப் பழகிய பாகனையே தூக்கிப் போட்டு காலால் தேய்த்துவிடும்! அந்த வெறிபிடித்த போக்கிலேயே, எத்தனை நாட்களுக்கு அது உயிரோடு உலவ முடியும், வேலும் வாளும் குத்துண்டு, அது பிணமாக வேண்டியதுதானே! அந்த முடிவுதான் இவனுக்கும்!' என்று அல்லி என்ற பணிப்பெண்ணிடம், கனகா என்ற பணிப்பெண் கூறிக் கொண்டிருந்ததை, அப்பக்கம் சென்ற அஞ்சலை கேட்டுவிட்டாள்.

தூமகேதுதான் மதயானை என்றும், மக்கள் அவனைக் கொன்று போடப் போகிறார்கள் என்றும் பணிப் பெண்கள் பேசிக்கொள்வதாக, அவள் நினைத்தாள்.

அதைக் கேட்ட ஒரு வாரத்திற்குப் பிறகு, அதே நினைவோடு கட்டிலில் கண்களை மூடியபடி சாய்ந்து படுத்துக் கொண்டிருந்த போது,

"சேர நாட்டு இளவரசே! வா! வா!' என்று கிளி அழைத்ததைக் கேட்டு, திடுக்கிட்டு கண்களைத் திறந்தாள்.

மிகுந்த கோபத்தோடு கனக சேனன், அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

"இவன் எங்கே இங்கு வருகிறான்?'' என்ற அதிர்ச்சியோடு அதி வேகமாக எழுந்தாள். கீழே இறங்க! அதற்குள் அவன் அருகே வந்து அவளை இறங்க முடியாதபடி தடுத்து 'எனக்கா நீ கேடு செய்தாய்? உன்னைக் கொல்லாமல் இன்று விடப்போவதில்லை?' என்று ஆத்திரத்தோடு கத்தினான்.

[வளரும்]

"காஞ்சி"

இரண்டாம் ஆண்டு மலர்

அண்ணாவின்

பொன்னோவியங்கள் பலவோடு

|

முன்னணியினர் பலரும் எழுதும்
கதை, கட்டுரை, கவிதை, நாடகம் முதலானவைகளுடன்
படக்கதை, துணுக்குகள் சேர்ந்து

|

கருத்துப் பேழையாய்
செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் வெளிவருகிறது.

விலை ரூ. 1-00தான்!

விற்பனையாளர்கள் தேவையான பிரதிகளுக்கு முன்பணத்துடன் 27-8-66க்குள் எழுதவேண்டுகிறோம்.

இன்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பித் தெரு, உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.